**கெக்கிராவ பிரதேச சபை**

**அநுராதபுர மாவட்டம்**

------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

------------------------------

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 15 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஜூன் 24 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---------------------------------------------------------

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கெக்கிராவ பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை காசுப் பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-------------------------------------------------------------------------

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---------------------------------------------

நகர மண்டபத்தின் பயன்பாட்டிற்காகக் கொள்வனவு செய்திருந்த ரூபா 884,500 பெறுமதியான திரைச்சீலைகளின் பெறுமதி நிலையான சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 02. நிதி மீளாய்வு

--------------------------

### 2.1 நிதி விளைவுகள்

---------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 22,904,154 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,712,359 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

----------------------------------

#### 2.2.1 வீத வரி

--------------

மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டியிருந்த ரூபா 1,597,599 ஆன வீதவரி வருமானத்தின் பின்னான அறவீட்டின் பிரகாரம் 2016 மார்ச் 31 ஆந் திகதி அறவிடப்பட வேண்டியிருந்த தொகை ரூபா 394,003 என பிரதேச சபை செயலாளரினால் 2016 ஏப்ரல் 29 ஆந் திகதி அறிக்கையிடப்பட்டிருந்தது.

### 2.2.2 கடை வாடகை

மீளாய்வாண்டில் ரூபா 313,000 இற்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்த கெகிராவை 01 ஆம் இலக்க கடல் மீன் கடையில் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிலுவை ரூபா 168,000 ஆக இருந்ததுடன் அந்நிலுவையை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு / முகாமைத்துவத் திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் சபையின் நகர மண்டப மேடைக்கு ரூபா 884,500 பெறுமதியான திரைச்சீலைகள் கொள்வனவு செய்யும் போது பொருத்தமான பெறுகை செயற்பாடு பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 9.75 ஏக்கர் பெறுமதியான 12 காணிகளின் பெறுமதி ரூபா 43,800 என காட்டப்பட்டிருந்ததுடன் தற்போதைய மதிப்பீட்டுப் பெறுமதிகளைப் பெற்றுக் கொண்ட நிலங்களின் உள்ளவாறான பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(இ) 1-3 ஆண்டுகள் காலப்பகுதியில் செயற்படுத்தப்பட்ட 100 அபிவிருத்தி நடவடிக்கைகளிற்கு கிடைக்க வேண்டிய ரூபா 20,673,847 ஆன தொகை நிர்மாண கடன்பட்டோர் மீதியின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அப்பணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(ஈ) 1-3 ஆண்டுகள் காலப்பகுதியில் செயற்படுத்தப்பட்ட 120 அபிவிருத்தி நடவடிக்கைகளிற்குச் செலுத்த வேண்டிய ரூபா 21,730,544 ஆன தொகை நிர்மாணக் கடன்கொடுத்தோர் மீதியின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அப்பணத்தை தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(உ) ரூபா 298,675 கூட்டுத்தொகையான 11 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் நிதிப்பிரமாணம் 257 இன் பிரகாரம் சான்றுறுதிப்படுத்தப்படாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### 3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2015 ஆம் ஆண்டில் சபை உறுப்பினர்களுக்காக ரூபா 20,650 விலையுள்ள 15 பிரயாணப் பைகளைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 309,750 தொகை செலவிடப்பட்டிருந்தது. அலுவலக நடவடிக்கைகளுக்காக இவ்வாறு பாரிய தொகை செலவிடப்பட்டு பிரயாணப் பைகள் கொள்வனவு செய்தமைக்கான காரணம் தெளிவுபடுத்தப்படாததுடன் 14 பிரயாணப் பைகள் மட்டும் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன.

### 3.3 திண்மக் கழிவுப்பொருள் முகாமை

கெகிராவ பிரதேச சபையினால் நாளாந்தம் பாரிய அளவு திண்மக் கழிவு சேகரிக்கப்படுவதுடன் கழிவுப் மீள்சுழற்சிச் செயற்றிட்டம் ஒன்று செயற்படுத்தப்படாமையினால் சுற்றாடல்சார் பிரச்சினைகள் தோன்றக் கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

**3.4 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்**

---------------------------------------------------------------

சபைக்குச் சொந்தமான கூட்டுத் தொகை ரூபா 3,198,000 தொகை பெறுமதியான சொத்துக்கள் மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்படாமையின் காரணமாக விளைவற்றுக் காணப்பட்டன.

**04. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

------------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(இ) கடன்பட்டோர் / கடன் கொடுத்தோர் கட்டுப்பாடு
(ஈ) வருமான நிர்வாகம்
(உ) திண்மக் கழிவு முகாமைத்துவம்